இணைப்பு—

(45-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

மோட்டார் வண்டிகள் பற்றிய சட்டங்கள்

நிருவாகம்

1974—75-ஆம் ஆண்டுத் தமிழ்நாட்டு சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

2. 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தை நிருவகிப்பது, போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். மோட்டார் வண்டிகள் சட்டம், ஒழுங்குப்படுத்துவதற்கான ஒன்றாகும். இச்சட்டம், மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வண்டிகளைக் கட்டுப்படுத்தல், ஓட்டுநர் உரிமம் வழங்கல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தல் மோட்டார் வண்டி விபத்து ஈட்டுறுதி செய்தல் ஆகியவற்றிற்கு வகை செய்கிறது. பயணிகள், சரக்குகள் போக்குவரத்திற்கானப் போதுமான வசதிகளைச் செய்து தந்து, அப்போக்குவரத்தில் மக்கள் பாதுகாப்பிற்கு உறுதி செய்வதும் இதன் குறிக்கோளாகும்.

3. பொது மக்களுக்கு வசதி எனக் கருதப்படும் வழித் தடங்களில் பயணிப் பேருந்துகள் ஓடுவதற்காகப் போக்குவரத்து அதிகாரிகளால் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. வாடகைச் சீருந்துகளுக்கும், சரக்குந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்கல், வேகத்தைக் கட்டுப் படுத்தல், சரக்குவண்டிகளில் ஏற்றும் பளுவை ஒழுங்கு படுத்தல், பயணப் பேருந்துகளில் இருக்கைகள், இடைவெளி வசதியாக அமைத்தல், ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல், போக்குவரத்து வண்டிகளை முறையாக முழுமையாகத் தணிக்கையிடல் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்குப் பாதுகாப்பும், வசதியும் உறுதி செய்யப்படுகிறது.